**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.</u>**

**<u>முன்னிலை:- திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,</u>**

**<u>சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.</u>**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 02ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் திங்கள் கிழமை

**<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.64/2024</u>**

**<u>CNR No.TNTV14-000293-2024</u>**

1. கோகிலா வயது 31/2024
2. சிவாந்த் (இளவர் இவரின் இயற்கை காப்பாளர் மற்றும் அவரது தாயார் கோகிலா)
3. செல்லையன் வயது 66/2025
4. வளர்மதி வயது 58/2025 ........மனுதாரர்கள்

(இ.ம.எண.3/2025 நாள்.16.10.2025 அன்று உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டது. )

எதிராக

சத்தியமூர்த்தி ........எதிர்மனுதாரர்

இந்த மனுவானது கடந்த 12.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.பா.துரை பி.ஏ., எல்.எல்.பி., மற்றும் இரா.துளசிராமன், பி.ஏ., பி.எல்., ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் வருகையில்லாத் தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும்,

சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்.....

**உத்தரவு**

கடந்த 03.04.2024ம் தேதி இரவு 9.30 மணியளவில் பிச்சன்கோட்டகம் தென்பாதியில் நடந்த சாலை விபத்தில் 1ம் மனுதாரரின் கணவர் அன்பரசன் என்பவர் இறந்துவிட்டதால் ரூ.25,00,000/-ஐ பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்கக்கோரி மனுதாரர்கள் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 140 மற்றும் 166படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்** :-

மனுவில் இறந்துபோன அன்பரசன் என்பவருக்கு 33 வயது நிரம்பியவர் என்றும், விபத்திற்கு முன்பு விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.36,000/- வருமானம் ஈட்டி தனது குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்றும், கடந்த 03.04.2024-ம் தேதி இரவு 9.30 மணியளவில் மனுதாரரின் கணவர் அவரது வாகனமான TN 51 AJ 1964 ACTIVA என்ற இருசக்கர வாகனத்தில் திருத்துறைப்பூண்டி - வேதாரண்யம் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பிச்சன்கோட்டகம் தென்பாதி என்ற இடத்தில் வந்த போது எதிர்மனுதாரரான சத்தியமூர்த்தி என்பவர் அவரது மனைவி இந்திரா ஆகிய இருவரும் TN 50 K 3448 DISCOVER என்ற இருசக்கர வாகனத்தில் மேற்கண்ட இடத்தில் வந்தபோது எதிர்மனுதாரரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாக வாகன

விதிமுறைகளை மீறி ஒலி எழுப்பாமல் கட்டுப்பாட்டை இழந்து ரோட்டில் ஓரமாக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த 1ம் மனுதாரரின் கணவர் அன்பரசன் என்பவர் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும், அவ்விபத்தில் 1ம் மனுதாரரின் கணவர் அன்பரசன் தலையில் காயம் பட்டு அவசர சிகிச்சைக்காக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமணையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி விபத்து நடந்த மறுநாள் கடந்த 04.04.2024 அன்று இறந்துவிட்டார்.

ii) மேற்படி விபத்து தொடர்பாக திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.219/2024 இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 279, 337–ன் படி பதிவு செய்து பின்பு காயம்பட்டவர் இறப்பிற்கு பின்னிட்டு மேற்கண்ட சட்டப்பிரிவை மாற்றம் செய்து இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 304 (ஏ)– ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட விபத்து எதிரிமனுதாரரின் அலச்சிய போக்குடன் ஓட்டிய காரணத்தினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், அப்போது விபத்து ஏற்படுத்திய எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு வாகன காப்பீடு அமலில் இல்லை என்றும், 1ம் மனுதாரரின் கணவர் அன்பரசன் இறந்ததன் பேரில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், விபத்தில் இறந்த 1ம் மனுதாரரின் கணவர் அன்பரசன் வருமானத்தை கொண்டுதான் மனுதாரர்கள் குடும்பமே அன்றாட வாழ்க்கை நடத்தி ஜீவனம் செய்து வந்த நிலையில் தற்போது அவரது இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்களின்

குடும்பம் அன்றாட ஜீவனம் செய்யவே முடியாத சூழ்நிலையில் திண்டாடி வருகிறது என்றும், மேலும் முதல் மனுதாரருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன என்றும், அதில் ஒருவர் 9 வயது மற்றும் ஒருவர் பிறந்து 4 மாதங்கள் ஆன நிலையில் மனுதாரரால் வேலைக்கு செல்லமுடியாமல் வாழ்வாதரமில்லாமல் மருத்துவ செலவினங்களுக்கு மற்றும் உணவு உடை போன்றவற்றிற்கு வருமானமின்றி கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றனர் என்றும், இரண்டு குழந்தைகளின் கல்வி, உணவு உடை என எதுவுமின்றி சமுதாயத்தில் பின்னோக்கி சென்றுவிடுவார்கள் என்றும், அதனால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், எதிர்மனுதாரரால் நல்ல வசதி வாய்ப்பு உடையவர் ஆவார் என்றும், அவருக்கு சொந்த நிலங்கள் உள்ளன என்றும், அதிக சொத்து உடையவர் என்றும், எனவே மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பு என்பது முற்றிலுமாக ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும் என்றும், ஆகையால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இந்த இழப்பிற்கு முற்றிலும் எதிர்மனுதாரரே முழு காரணம் ஆகையால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு எதிர்மனுதாரர் இழப்பீடு தொகையாக ரூ.25,00,000/- இழப்பீட்டு தொகை மனுதாரர்களுக்கு கிடைக்கும் வரை 12 சதவீதம் வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து மனுதாரர்களுக்கு இந்த எதிர்மனுதாரர் வழங்க வேண்டுமென மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

3. எதிர்மனுதாரர் தரப்பில் சம்மன் சார்வு செய்யப்பட்டுள்ள நிலையில் 10.01.2025-ம் தேதியன்று நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**4. <u>பிரச்சனை</u>:-**

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரர்களுக்கு இழப்பீடு தர கடமைப்பட்டவர் யார்?

3. மனுதாரர்கள் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**5.** இம்மனுவில் இறந்துபோன அன்பரசன் என்பவரின் மனைவியான மனுதாரர் கோகிலா என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:-</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு விபத்தில் இறந்துபோன அன்பரசன் என்பவரின் மனைவியான மனுதாரர் கோகிலா என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதத்தை நிரூபணம் செய்யும் முறை பற்றி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் <u>United India Insurance Co. Ltd Vs. Krishnaveni and others</u> என்ற வழக்கில் வழங்கி <u>2016(1) TN MAC 563 (DB)</u>-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிக்காட்டுதலின்படி இந்த மனுவில் முடிவு செய்ய வேண்டியுள்ளது. மேற்படி முன்தீர்ப்பின் **<u>பத்தி 15</u>**

**மற்றும் 16-ல்** **"15. Bimla Devi & Others Vs. Himachal RTC. 2009(1) TN MAC 700 (SC); 2009 (13) SCC 530**. the Supreme Court held as follows;

"It was necessary to be borne in mind that strict proof of an accident caused by a particular bus in a particular manner may not be possible to be done by the Claimants. The Claimants were merely to establish their case on the touchstone of preponderance of probability. The standard of proof beyond reasonable doubt could not have been applied. For the said purpose, the high court should have taken into consideration the respective stories set forth by both the parties".

16. It is well settled law that proceedings before the Claimants Tribunal are summary in nature and it is suffice to consider. Whether there is any preponderance of probability, as to the manner of accident, as detailed in the Claim Petition. Strict proof of evidence is not required. In the absence of any rebuttal evidence, the finding of the Tribunal regarding negligence cannot be termed as perverse or it is not a case of no evidence."

என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. ஆகவே இந்த மனுவிலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நெறிப்படுத்தியுள்ள வழிகாட்டுதலின்படி விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர் தங்களுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானது. குற்றவியல் வழக்குகளை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

7. மேலும், **ம.சா.1 ஆன கோகிலா என்பவர் தனது சாட்சியத்தில்**

" கடந்த 03.04.2024-ம் தேதி இரவு 9.30 மணியளவில் அவரது வாகனமான TN 51 AJ 1964 ACTIVA என்ற இருசக்கர வாகனத்தில்

திருத்துறைப்பூண்டி – வேதாரண்யம் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பிச்சன்கோட்டகம் தென்பாதி என்ற இடத்தில் வந்த போது எதிர்மனுதாரரான சத்தியமூர்த்தி என்பவர் அவரது மனைவி இந்திரா ஆகிய இருவரும் TN 50 K 3448 DISCOVER என்ற இருசக்கர வாகனத்தில் மேற்கண்ட இடத்தில் வந்தபோது எதிர்மனுதாரரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாக வாகன விதிமுறைகளை மீறி ஒலி எழுப்பாமல் கட்டுப்பாட்டை இழந்து ரோட்டில் ஓரமாக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த எனது கணவர் அன்பரசன் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும், அவ்விபத்தில் எனது கணவர் அன்பரசன் தலையில் காயம் பட்டு அவசர சிகிச்சைக்காக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி விபத்து நடந்த மறுநாள் கடந்த 04.04.2024 அன்று இறந்துவிட்டார். " என சாட்சியம் அளித்துள்ளார்.

8. ம.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டது. ஆனால் மேற்படி சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் விபத்து குறித்து ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.6ஆன பிணக்கூராய்வு அறிக்கை மற்றும் ம.சா.ஆ.5ஆன விபத்து பதிவேடு ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில்

எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 50 K 3448 DISCOVER என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் (சத்தியமூர்த்தி என்பவரின்) அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவும் தான் இவ்விபத்திற்கு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9. <u>பிரச்சினை எண்.2க்கு தீர்வு:-</u>

இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 50 K 3448 DISCOVER என்ற இருசக்கர வாகனத்தின் (சத்தியமூர்த்தி என்பவரின்) அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவும் தான் இவ்விபத்திற்கு காரணம் என்பதாலும், எதிர்மனுதாரர் வாகனத்திற்கான காப்பீடு நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் இந்நீதிமன்றத்தின் விசாரணையிலிருந்து தெரியவருகிறது. எனவே எதிர்மனுதாரரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டுள்ளதால் வாகனத்தின் உரிமையாளரான எதிர்மனுதாரர் தான் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் ஆவார் என 2வது பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

10<u>. பிரச்சனை எண்.3க்கு தீர்வு</u>:-

இந்த மனுவில் மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்பதை இனி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த மனுவில் 1ம் மனுதாரர் கோகிலா என்பவர் அவரது கணவர் அன்பரசன் இறப்பை மெய்ப்பிக்க ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டதோடு இறந்த அன்பரசனின் சடலக்கூராய்வு

அறிக்கையான **ம.சா.ஆ.6** ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களில் இருந்து மனுதாரரின் கணவர் அன்பரசன் என்பவர் விபத்தினால் இறந்துவிட்டார் என தெரியவருகிறது. வழக்கு சம்பவத்தின்போது இறந்து போன அன்பரசன் என்பவருக்கு இறக்கும்போது 32 வயது என்று **ம.சா.ஆ.6**ஆன சடலக்கூராய்வு அறிக்கை ஆவணம் மூலம் தெரியவருகிறது.

**11.** இறந்துபோன அன்பரசன் என்பவர் விபத்து சமயத்தில் விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.36,000/– வருமானம் ஈட்டி வந்துள்ளார் என்று மனுவில் கூறப்பட்டிருந்தாலும், மனுதாரர்கள் தரப்பில் அதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன்தீர்ப்பின்படி இந்நீதிமன்றம் தீர்வு காண விரும்புகிறது.

1) **Managing director,TNSTC villupuram Vs. Seetha lakshmi** dated:03.04.2017, CMA No.1132/2017, the Hon'ble Madras High court has fixed the monthly income Rs.7000/- in the year 2012, for a non mazdoor staff of PWD, following the Judgement of the Hon'ble Supreme Court in syed sadiq and others Vs. DM UIIC LTD., [CD] 2014 (SC) 044] wherein, the Honorable Supreme Court fixed the monthly income of a vegetable vendor, at Rs.6500/- in the year 2008.

2) In **Andal and others Vs Avinav Kannan and New India Assurance Co Ltd,** reported in 2019 (1) TNMAC 54, The Hon'ble Madras High Court while fixing the income for a meat chopper who had died on 07.02.2014, has taken his income

Rs.6500/- in the year 2007-2008 and multiplying it with the cost of inflation index for the year 2013-2014 and then driving the result with the cost of inflation index for the year 2007-2008 (Rs.6500/-*220/129) has arrived at the income at Rs.11,085/- and has rounded off the same at Rs.11,000/- per month.

3) In **Kirti Vs Oriental Insurance Company**, the Hon'ble Supreme Court has approved the adopting of minimum wages prescribed by the Government for skilled workers, in a case where no evidence or documents were produced to show the income of the deceased.

4)In **CIVIL APPEAL NO.615OF 2021 [Arising out of S.L.P.(C) No.6466 of 2019] Chandra @ Chanda @ Chandraram & Anr. Versus Mukesh Kumar Yadav & Ors**, the Hon'ble Supreme Court has held that in the absence of salary certificate, the minimum wage notification can be a yardstick but at the same time cannot be an absolute one to fix the income of the deceased.

மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவுசெய்து ஒரு விவசாயியோ, தொழிலாளியாகவோ மற்றும் வேறு இதர தனியார் வேலைகளை செய்பவராக இருந்தாலும் குறைந்த பட்ச ஊதிய சட்டப்படி, இறந்தவர் ஒரு நாளைக்கு ரூ.400 எளிதாக சம்பாதித்திருப்பார், இறந்து போன அன்பரசன் என்பவரும் நாள் ஒன்றுக்கு ரூ.400/– வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.12,000/– சம்பாதித்து இருப்பார் என்று இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மாதம் ரூ.12,000/– ஊதியம் என இத்தீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

**<u>12. எதிர்கால கூடுதல் வருவாய்</u>**

மேற்படி மாத வருமானத்திற்கு வருங்கால உயர்வாக மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **National Insurance Company Limitted Versus Pranay Sethi & others** என்ற வழக்கில் வழங்கி **2017(2) TNMAC 609 (SC)-ல்** பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி முடிவு செய்ய வேண்டியுள்ளது. அந்த முன்தீர்ப்பின் **பத்தி 61** (iii) & (iv) –ல் In view of the aforesaid analysis, we proceed to record our conclusions:–

(iii) While determining the income, an addition of **50%** of actual salary to the income of the deceased towards **future prospects**, where the deceased had a permanent job and was below the age of **40** years, should be made, The addition should be **30 %** if the age of the deceased was between **40 to 50** years, In case the deceased was between the age of **50 to 60** years, the addition should be **15 %** Actual salary should be read as actual salary less tax.

(iv) In case the deceased was <u>self–employed or on a fixed salary, as addition of 40% of the established income should be the warrant where the deceased was below the age of 40 years.</u> An addition of **25 %** where the deceased was between the age of **40 to 50** years and **10 %** where the deceased was between the age of **50 to 60** years should be regarded as the necessary method of computation. The established income means the income minus the tax component" என மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

ஆகவே மேற்கண்ட முன்தீர்ப்பில் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் வழிகாட்டியுள்ளதன் அடிப்படையில் 32வயதான இறந்துபோன அன்பரசன் என்பவர் மாத வருமானத்திற்கு வருங்கால வருமான உயர்வாக (future

prospects) 40% சதவீதம் கூட்டவேண்டும். ஆக மொத்தம் அவருடைய மாத வருமானம் ரூ.12,000/– (12000+40%= Rs.16,800/–) ஆக இறந்து போனவரின் ஆண்டு வருமானம் Rs.2,01,600/– (Rs.16800 x12) ஆகும்.

**<u>13. சுயசெலவீனத்திற்கான கழிவு மற்றும் பெருக்கல் எண் கணக்கீடுதல்</u>**

விபத்தில் இறந்து போனவரை சார்ந்து அவருடைய மனைவியான 1ம் மனுதாரர், மூத்த மகனான 2ம் மனுதாரர், அன்பரசனின் தாய் மற்றும் தந்தை இருந்துள்ளதாக **ம.சா.ஆ.3**ஆன வாரிசு சான்றிதழின் அடிப்படையில் விபத்தில் இறந்துபோன அன்பரசனின் என்பவருடைய ஆண்டு வருமானத்தில் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **Sarala verma & Others Versus Delhi Transport Corporation & Another** என்ற வழக்கில் வழங்கி **2009 (2) TNMAC 1 (SC)**–ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி அவருடைய ஆண்டு வருமானத்தில் தனிப்பட்ட மற்றும் வாழ்க்கை வசதி செலவினங்களுக்காக குறிப்பிட்டத் தொகையை கழிக்கவேண்டும். மேற்படி முன்தீர்ப்பின் **பத்தி 14–ல்**

**"Though in some cases the deduction to be made towards personal and living expenses is calculated on the basis of units indicated in Trilok Chandra, the general practice is to apply standardized deductions. Having considered several subsequent decisions of this Court, We are of the view that where the deceased was married, the deduction towards personal and living expenses of the deceased, should be one -third (1/3rd) where the number of dependent family members is 2 to 3, <u>one - fourth (1/4th) where the number of dependant family members is 4 to 6</u>, and one – fifth (1/5th) where the number of dependant family members exceed six.** என மாண்புமிகு இந்திய

உச்சநீதிமன்றம் வழிகாட்டியுள்ளதன் அடிப்படையில் 4 நபர்கள் இறந்து போனவரை சார்ந்து இருந்து உள்ள நிலையில் அவருடைய ஆண்டு வருமானத்தில் 1/4 பங்கு கழிக்கவேண்டும்.

மேற்கண்டவாறு இறந்துபோனவரின் ஆண்டு வருமானம் கணக்கீடு செய்யப்பட்ட நிலையில் அவருடைய வருமான இழப்பை கணக்கீடு செய்ய பயன்படுத்தப்பட வேண்டிய பெருக்கத்தினை (Multiplier) மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் மேற்சொன்ன **Sarala verma & Others Versus Delhi Transport Corporation & Another** என்ற வழங்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் முடிவு செய்யவேண்டும். அந்த முன்தீர்ப்பின் பத்தி – 21ல்

**"We therefore hold that the multiplier to be used should be as mentioned in column (4) of the Table above (preparred by applying Susamma Thomas, Trilok Chandra and Charlie). Which starts with an operative multiplier of 18 (for the age groups of 15 to 20 and 21 to 25 years), reduced by one unit for every five years, that is M-17 for 26 to 30 years, M-16 for 31 to 35 years, M-15 for 36 to 40 years, M-14 for 41 to 45 years, and M-13 for 46 to 50 years, then reduced by two units for every five years, that is M-11 for 51 to 55 years, M-9 for 56 to 60 years, M-7 for 61 to 65 years and M-5 for 66 to 70 years"** என வழிவகை செய்துள்ளதன் அடிப்படையில் இறந்துபோன அன்பரசன் என்பவருக்கு விபத்து சமயத்தில் 32 வயது என்பதால் பெருக்கமான (Multiplier) 16- ஐ பயன்படுத்த வேண்டும்.

**14. ஏனைய தலைப்புகளின் கீழான இழப்பீடு**

மேற்சொன்ன மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **National Insurance Company Limitted Versus Pranay Sethi & others** என்ற வழக்கின்

முன்தீர்ப்பின் **பத்தி 61 (Vii)–ல்**

**" In view of the aforesaid analysis, we proceed to record our conclusions:**

**(Viii) Reasonable figures on conventional heads, namely, loss of estate, loss of consortium and funeral expenses, Transport should be Rs. 15,000/- Rs. 40,000/-, Rs. 15,000/- and Rs.10,000/- respectively, The aforesaid amounts should be enhanced at the rate of 10% in every three years."**

என மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் வரையறை செய்துள்ளதன் அடிப்படையில் இறந்து போனவரின் மனைவியான 1ம் மனுதாரருக்கு கணவரின் இறப்பினால் ஏற்பட்டுள்ள தாம்பத்ய உறவுக்கான இழப்பீடு (loss of consortium), 1ம் மனுதாரருக்கு கணவரின் இறப்பினாலும் மற்றும் குழந்தைகளுக்கு தந்தையின் இறப்பினாலும், பெற்றோர்களுக்கு மகனின் இறப்பினால் ஏற்பட்டுள்ள அன்பு மற்றும் பாசஇழப்பு (Loss of Love and affection) மற்றும் போக்குவரத்து செலவீனம், சொத்து இழப்பு (Loss of estate) மற்றும் இறந்து போனவரின் இறுதிச் சடங்கிற்கான செலவினங்கள் (Funeral expenses) ஆகியவைகளுக்காகவும், கூடுதலாக இழப்பீடு பெற உரிமை உள்ளவர்கள் ஆகிறார்கள். மேற்கண்டவைகளை முழுமையாக ஆராயும்போது மனுதாரர்கள் மற்றும் அவருடைய தாய், மற்றும் தந்தை வழங்கப்படவேண்டிய இழப்பீட்டினை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்து பகிர்ந்தளிக்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**15.** இந்த தீர்ப்பாயத்தால் நிர்ணயம் செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பு செய்யப்படும் (Apportionment) இழப்பீடு பின்வருமாறு:

| வ. எண். | இழப்பீடு வழங்கப்படும் இனங்கள் | பகிர்ந்தளிப்பு செய்யப்படும் தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | இறந்து போனவரின் ஆண்டு வருமானம் = | Rs.2,01,600/- |
| 2. | சார்ந்திருத்தலால் ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் பெருக்கம் (Loss of dependency and multiplier ) Rs.2,01,600 x 16 = 32,25,600/- சொந்த செலவினங்களுக்காக 1/4 பங்கு (ரூ.8,06,400/– கழிக்க ) (Rs. 32,25,600 – Rs. 8,06,400 = 24,19,200/-) = | Rs.24,19,200 /- |
| 3. | மனுதாரருக்கு கணவர் இழந்ததால் ஏற்பட்டுள்ள தாம்பத்ய உறவு இழப்புக்கான இழப்பீடு (Loss of consortium) = | Rs. 44,000/- |
| 4. | அன்பு மற்றும் பாச இழப்பு (Loss of love and affection) 1 முதல் 4 மனுதாரர்களுக்கு தலா ரூ.18,000/– வீதம்) (18000x4) = | Rs.72,000/- |
| 5. | இறுதிச்சடங்கிற்கான செலவினங்கள்(Funeral expenses) = | Rs.15,000/- |
| 6. | சொத்திழப்பிற்கான இழப்பீடு (Loss of estate) = (ஆடை மற்றும் வாகன சேதம்) | Rs. 10,000/- |
| 7. | போக்குவரத்து செலவீனம் = | Rs. 10,000/- |
| | ( 2+3+4+5+6+7) மொத்தம் = | Rs.25,70,200/- |

**16.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் மற்றும் 3ம் எதிர்மனுதாரருக்கு இழப்பீடாக மொத்தம் ரூ.25,70,200/- சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையான நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**17.** இறுதியாக மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டும், 1ம் மனுதாரருக்கு ரூ.10,28,080/-மும், 2ம் மனுதாரருக்கு ரூ.7,71,060/-மும், 3 மற்றும் 4ம் மனுதாரர்களுக்கு தலா ரூ.3,85,530/-மும் ஆக மொத்தம் வாகன விபத்து இழப்பீடாக ரூ.25,70,200/-ஐ இழப்பீடாக மனு தாக்கல் நாள் முதல் (18.10.2024) தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் எதிர்மனுதாரர் கூட்டாகவோ, தனித்தனியாகவோ மனுதாரர்களுக்கு இழப்பீடாக இந்நீதிமன்ற வங்கி

கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க உத்தரவிடப்படுகிறது. 2 மாதத்திற்குள் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இழப்பீட்டு தொகையை மனுதாரர்கள் வங்கி கணக்கில் NEFT/RTGS மூலம் வழங்க வேண்டும் என்றும், மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர்கள் தங்களுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

18. விபத்தானது 2024-ல் ஏற்பட்ட காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்த பின்னர் 1 மற்றும் 3, 4 மனுதாரர்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம் என்றும், 2ம் மனுதாரர் மைனர் என்பதால் அவருடைய உரிமை வயதை அடையும்வரை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், அதற்குரிய வட்டித் தொகையை 6 மாதங்களுக்கு ஒருமுறை வங்கியிலிருந்து இளவர் மனுதாரரின் காப்பாளரான அவரது தாயார் 1ம் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர்கள் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.24,702/- உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்

உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.32,702/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லபட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.26 09:59:28 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை

தீர்ப்பாய நடுவர்/சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**செலவுத் தொகை பட்டியல்**

| மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 25074 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | - | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 32702 | 00 |
| சம்மன்படி | 4 | 50 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 57891 | 00 |

(இம்மனுவின் செலவுத் தொகையான ரூ.57,891/—ஐ எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள்**:—

| | | |
|---|---|---|
| ம.சா.1 | கோகிலா | 1ம் மனுதாரர் |

**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**:—

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.04.2024 | முதல் தகவல் அறிக்கை – நகல் |
| ம.சா.ஆ.2 | 15.04.2024 | 1ம் மனுதாரரின் கணவரின் இறப்பு சான்றிதழ்— நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.3 | 06.05.2024 | வாரிசு சான்றிதழ் – நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.4 | —— | மனுதாரர்கள் பெயரிலுள்ள ஆதார் அட்டை (எண்ணிக்கை – 2)– நகல் |
| ம.சா.ஆ.5 | 03.04.2024 | விபத்து பதிவேடு – நகல் |
| ம.சா.ஆ.6 | 05.04.2024 | பிணக்கூராய்வு அறிக்கை – நகல் |
| ம.சா.ஆ.7 | —— | 1ம் மனுதாரர் பெயரிலுள்ள குடும்ப அட்டை (Smart card) (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) |

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: – இல்லை</u>**

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.26 09:59:34 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,

தீர்ப்பாய நடுவர்/சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.